# தொழிலாளர்களுக்கான அந்தரங்க ஊற்று

வேலைத்தள பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபை (WSIB) உங்களைப் பற்றி எந்தவிதமான விபரங்களை சேகரிக்கிறது என்பதையும், நிறுவனம் அதை எப்படி உபயோகிப்பது, பத்திரப்படுத்துவது, அத்துடன் வெளியிடுவது என்பதையும் தொழிலாளர்களுக்கான அந்தரங்க ஊற்று விளக்கும்.

வேலைத்தள பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபை (WSIB) உங்களின் அந்தரங்கங்களையும் மற்றும் உங்களின் தனிப்பட்ட இரகசியமான விபரங்களையும் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளது. *விபரத்திரட்டு உரிமை மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்* அமைந்து, *வேலைத்தள பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சட்டத்தை* நிர்வாகம் செய்வதற்கும் மற்றும் அமுல்படுத்துவதற்கும் WSIB உங்களின் விபரங்களை சேகரிக்கும்.

## உங்களின் தனிப்பட்ட விபரங்களை சேகரித்தல்

பின்வரும் தேவைகளுக்கு ஏற்றபடி உங்களைப் பற்றிய விபரங்கள் பல வழிகளின் மூலம் சேகரிக்கப்படும். உங்களிடம், உங்களுக்கு வேலை கொடுப்பவரிடம், உங்களின் சுகாதாரக் கவனிப்பு மற்றும் தொழிற் சந்தைக்குள் மீண்டும் புகுவதற்கு சேவை வழங்குபவர், அத்துடன் மற்றவர்களும் ஆகும்:

**நிர்வாகம்**
உங்களிடம் நாங்கள் பின்வரும் விரிவான தகவல்கள் தரும்படி கேட்போம் அதாவது, உங்கள் பெயர், முகவரி, வீட்டுத் தொலைபேசி இலக்கம், பிறந்த தேதி மற்றும் உரிமை கோரல் எண். இந்த விபரங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வதற்கும் மற்றும் உங்களின் பதிவுகள் உங்கள் உரிமைக் கோரலின் கோவையுடன் சரியாக இணைகின்றதா என்பதை உறுதிப்படுத்தவும் எமக்கு உதவும். ஒரு உரிமைக் கோரல் பதிவு செய்தவுடன், தொழிலாளியை அடையாளங் காண்பதற்கும் மற்றும் *வருமானவரிச் சட்டத்திற்கு* அமைய வருமானவரி விபரத்திரட்டு வழங்குவதற்கும், வேலைக்காப்புறுதி சேகரிக்கப்படும். சுகாதார அமுலாக்க உபயோகத்திற்கு, அதாவது ஒன்ராறியோ சுகாதார காப்புறுதித் திட்டப் (OHIP) பத்திரங்களை சரிக்கட்டுவதற்கும், சுகாதார கவனிப்பைத் திட்டமிடுவதற்கும், அத்துடன் ஆராய்ச்சிப் படிப்பு போன்றவற்றிற்கும் சுகாதார அட்டை எண் சேகரிக்கப்படுவதற்கு *தனிப்பட்ட சுகாதார தகவல் பாதுகாப்புச் சட்டம்* அதிகாரம் வழங்கியுள்ளது.

**நிதி**
உங்களின் ஊதிய இழப்பிற்கான உதவிகளின் தொகையைத் தீர்மானிப்பதற்கு, விபரத்திரட்டுக்கள், அதாவது உங்களின் வாராந்த, மாதாந்த, அல்லது வருடாந்த வருமானம் எமக்கு உதவியாக இருக்கும் மற்றும் உங்களுக்கு வேலைகொடுப்பவர் அல்லது உங்கள் சம்பளத் துண்டு அதை உறுதிப்படுத்த வேண்டும்.

வருமானப் பிரதியீட்டு ஊற்றுகள் அதாவது சமூக உதவி, வேலைக்காப்புறுதி அத்துடன் தனிப்பட்ட காப்புறுதி போன்றவற்றை வேலைத்தள பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபைக்கு **(WSIB)** நீங்கள் அறிவிப்பதன் மூலம் பணக் கொடுப்பனவு மற்றும் உதவி சம்பந்தமான கடன்கள் மறுபடியும் செய்யாமல் இருப்பதை தவிர்க்கலாம். நேரடி வரவு ஒரு தெரிவாக இருப்பின் அல்லது தேவைப்பட்டால் உங்களது வங்கிக் கணக்கு எண் கேட்கப்படலாம்.

### மருத்துவம்

உதவி பெறுவதற்கு நீங்கள் தகுதியுடையவரா என்பதை தீர்மானிப்பதற்குப் பின்வரும் விபரங்களை சேகரிக்கப்படுவது எமக்கு உதவியாக இருக்கும், அதாவது உங்களுக்கு வைத்தியம் செய்யும் ஆரோக்கியத் துறைசார் நிபுணரின் அறிக்கை, சிபாரிசு செய்யப்பட்ட வைத்திய விளக்கங்கள், உடற்பயிற்சி வைத்தியம் செய்த தேதி, வைத்தியசாலை அறிக்கைகள் அல்லது வேறு சிகிச்சைகளின் அறிக்கைகள். மேற்கொண்ட மேலதிக விபரங்கள் உங்களுக்கு அல்லது உங்களுக்கு சுகாதார பராமரிப்பு வழங்குபவருக்கு தரமான சுகாதாரக் கவனிப்பு ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். *வேலைத்தள பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சட்டத்திற்கு* ஏற்ப வைத்தியம் செய்யும் ஆரோக்கியத் துறைசார் நிபுணர்கள் உங்களின் உரிமை கோரல் சம்பந்தமான சுகாதார விபரங்களை, WSIB க்கு வழங்க வேண்டும்.

### மோசடி மற்றும் கேட்டுக்கொண்டபடி செய்யாமை

மோசடி மற்றும் கேட்டுக்கொண்டபடி செய்யாமை காரணமாக சட்டத்தை மீறுதல் அல்லது வேறு விசாரணைக்கு நிர்வாகம், நிதி அத்துடன் வைத்திய விபரங்கள் சேகரிக்கப்படலாம்.

## உங்களின் தனிப்பட்ட விபரங்களை உபயோகித்தல், வைத்திருத்தல் மற்றும் வெளியிடுதல்

### உதவி தொடர்பான நிர்வாகம்

சில வேளைகளில், அதாவது தீர்மானக் கடிதத்தில், இரகசியமான விபரங்களை, உங்கள் உரிமைக் கோரலுக்கு சம்பந்தப்பட்ட தனிப்பட்ட சுகாதார விபரங்கள் உட்பட, உங்கள் சம்மதம் இல்லாமல் உங்கள் வேலைகொடுப்பவருக்கு வெளியிடலாம். இது *வேலைத்தள பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சட்டத்திற்கும்* அத்துடன் *விபரத்திரட்டு உரிமை மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புச் சட்டத்திற்கும்* இணங்கியதாகும்.

உங்களின் உரிமைக் கோரலில் வேலை செய்யும் WSIB பணியாளருக்கும் மற்றும் WSIB யில் ஒப்பந்தம் செய்தவர்களுக்கும் உங்களின் சொந்த விபரங்களைப் பெறுவதற்கு அனுமதி உண்டு. அனைத்து உரிமைக் கோரல் கோவை விபரத்திரட்டும்

தற்போது, அதிகமான பொது அத்துடன் தனிப்பட்ட அமைப்புக்கள் போல WSIB யும் வெளியேயுள்ள நிறுவனங்களின் சேவையை உபயோகிக்கிறது. உதாரணமாக வெளியே சேவை வழங்குபவர் உங்களின் கோரிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட மருந்துச் சீட்டுக்கு கொடுப்பனவு செய்ய ஒழுங்கு செய்வார். உங்களின் விபரங்கள், தாள் வடிவம் அல்லது மின்னணு வடிவம் மூலம் சேமித்து வைக்கப்படலாம், இரண்டும் உள்ளுக்குள்ளும் மற்றும் வெளியிலுமாகும். ஒப்பந்தத்தில் உள்ளபடி உங்களின் சொந்த விபரங்கள் பாதுகாக்கப்படும்.

**சுகமடைதலும் மற்றும் வேலைக்குத் திரும்புதலும்**
நீங்கள் உதவி பெறுவதற்கு உரிமை கோரும் பொழுது, உங்களின் செயல் ஆற்றல்கள் சம்பந்தமான விபரங்களை வெளியிடுவதற்கு சம்மதம் கொடுக்க வேண்டும். இந்தச் சம்மதம் உங்களின் சுகாதாரக் கவனிப்பு மருத்துவருக்கு உங்களின் செயல் ஆற்றல்கள் பற்றிய விபரங்களை நேரடியாக உங்கள் வேலை கொடுப்பவருக்கு வெளியிடுவதற்கு அனுமதிக்கும். ஒரு பதிவும் **WSIB** க்கு கொடுக்கப்படும். இது சுகமாகவும் மற்றும் வேலைக்குத் திரும்புவதற்கும் உதவியாக இருக்கும்.

சரியான வைத்தியம் பெறுவதற்கும், அத்துடன் தொழிற் சந்தை சாதனங்கள் உங்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கும் உங்களின் சொந்த விபரங்கள் உங்களுக்கு வைத்தியம் செய்யும் ஆரோக்கியத் துறைசார் நிபுணருக்கும் மற்றும் தொழிற் சந்தைக்கு மீண்டும் புகுவதற்கு சேவை வழங்குபவருக்கும் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

**ஆராய்ச்சியும் மற்றும் தடுப்பு முறையும்**
வேலைத்தளத்தில் ஏற்படும் காயங்கள் மற்றும் சுகயீனங்களுக்கான காரணங்களுக்கும் மற்றும் அதன் தன்மைகளை ஆராய்வதற்கும், திறமையான தடுப்புத் திட்டத்தை விருத்தி செய்வதற்கும் **WSIB** ஆதரவளிக்கிறது. *விபரத்திரட்டு உரிமை மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புச் சட்டத்திற்கு* அமைய **WSIB** தன் நிர்வாகத் தகவல்தளத்தை பாதுகாப்பு ஸ்தாபனத்திற்கும், விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் தேவைப்படும் போது மற்றவர்களுக்கும் அதைப் பெறக்கூடியதாக **WSIB** தயாரிக்கும்.

வேலைத்தளத்தில் ஏற்படும் காயங்கள் மற்றும் சுகயீனங்கள் அத்துடன் எங்களின் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தையும் மதிப்பீடு செய்வதற்கு மூன்றாம் கட்சி ஆராய்ச்சியாளர்களை WSIB ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இந்த மூன்றாம் கட்சி ஆராய்ச்சியாளருக்கு உங்களின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கமும் கொடுக்கப்படலாம் அதன் மூலம் உங்களுடன் தொடர்பு கொண்டு இப்படியான ஒரு மதிப்பீட்டில் பங்கு பெறுவதற்கு உங்களின் அனுமதியைப் பெறக் கூடியதாக இருக்கும்.

**வலிந்து செயற்படுத்துதல்**
தகாத உபயோகத்திலிருந்து வேலைத்தள பாதுகாப்பு மற்றும் காப்புறுதி முறைமையைப் பாதுகாப்பதற்கு, மோசடி மற்றும் கேட்டுக்கொண்டபடி நடக்காமை போன்ற விசாரணைக்காக சொந்த விபரங்கள் சேகரிக்கப்படலாம். சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட வேறு அரசாங்கத்தார்கள், காவல் துறையினர் அத்துடன் தேவைப்பட்டால் வழக்கு மன்றம் போன்றவற்றிற்கும் விபரங்கள் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

## உங்களின் உரிமை கோரல் விபரங்களை பெறுதல் மற்றும் சரிசெய்தல்

உரிமைக் கோரலின் ஒரு பிரதியைப் பெறுவது இலகுவானது; எளிமையாக உங்களுக்குத் தீர்வினை வழங்கியவருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கவும். அந்த விண்ணப்பத்தைச் செய்வதற்கு WSIB யின் "தொழிலாளி விண்ணப்ப உரிமைக் கோரலின் ஒரு பிரதி" என்ற பத்திரம் உங்களுக்கு உதவியாக இருக்கும். இது www.wsib.on.ca என்ற எங்கள் இணைய தளத்தில் அல்லது எங்கள் பன்மொழி எண்ணை அழைப்பதன் மூலமும் கிடைக்கும்.

உரிமை கோரலின் ஒரு பிரதியைப் பெறுவதற்கு உங்களுக்கு ஏதாவது பிரச்சனைகள் இருந்தால், நீங்கள் WSIB யின் பன்மொழி எண்ணை அழைத்து தொழில் சேவைகளுடன் தொடர்பு கொள்ளலாம்.

உங்கள் பதிவுகள் பிழையாக உள்ளது என நீங்கள் உணர்ந்தால் அந்த விபரங்களை திருத்தும் படி தீர்மானத்தை எடுத்தவருடன் நீங்கள் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

மேன்முறையீடு நடவடிக்கையில் பங்குபற்றும் பொழுது ஏதாவது பிரச்சனைகள் இருந்தால், உரிமைக் கோரலின் ஒரு பிரதியை உங்கள் வேலை கொடுப்பவர் பெறக் கூடும். உங்களுக்கு வேலைகொடுப்பவர் உரிமைக் கோரலின் ஒரு பிரதியை கேட்கும் பொழுது, குறிப்பிட்ட மருத்துவ நலன் தொடர்பான தகவல்களை வேலைகொடுப்பவருக்கு அனுப்புவதற்கு ஆட்சேபனை செய்வதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவோம். *வேலைத்தள பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சட்டத்தின் கீழ்* வேலைகொடுப்பவரும் அத்துடன் வேலைகொடுப்பவரின் பிரதிநிதியும் WSIB யால் கிடைக்கப் பெற்ற விபரங்களை வெளியே போகாமல் இரகசியமாக வைத்திருக்க வேண்டியது அவர்களின் கடமையாகும்.

## உங்களின் சொந்த விபரங்களைப் புதுப்பித்தல்

உங்களின் சொந்த விபரங்களில், அதாவது உங்களின் முகவரி அல்லது தொழில் நிலமையில் மாற்றம் ஏற்பட்டால், பதிவுகளைப் புதுப்பிப்பதற்கு உங்களுக்குத் தீர்மானம் வழங்கியவருடன் தொடர்பு கொள்ள வேண்டும். முகவரி மாற்றங்கள் பன்மொழி எண்ணை அழைப்பதன் மூலம் செய்யலாம்.

## தொடர்புக்கான விபரங்கள்

உரிமைக் கோரலின் ஒரு பிரதியைப் பெறுவதற்கும், தனிப்பட்ட விபரங்களைப் புதுப்பிப்பதற்கும் அல்லது சேகரித்தல், உபயோகப்படுத்தல் அல்லது வெளியிடுதல் போன்ற உங்களின் சொந்த விபரங்களை அறிவதற்கும் உங்களுக்குத் தீர்மானம் வழங்கியவரை நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது அழையுங்கள்.

WSIB யின் பன்மொழி இணைப்பு எண் 416-344-2000
கட்டணமில்லாத எண் 1-800-465-5606
செவிப்புலன் இழந்தோருக்கான தொலைபேசி சேவை 1-800-387-0050

அந்தரங்கம் சம்பந்தமாக ஏதாவது கரிசனைகள் அல்லது விஷயங்கள் இருந்தால், WSIB யின் அந்தரங்க அலுவலகத்திற்கு 416-344-5323 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலமோ அல்லது மேலே குறிப்பிட்ட கட்டணமில்லாத எண்ணை அழைப்பதன் மூலமோ நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். கீழே குறிப்பிட்ட WSIB யின் முகவரிக்கு நீங்கள் எழுத்து மூலமும் தொடர்பு கொள்ளலாம்.

Workplace Safety and Insurance Board
200 Front Street West
Toronto, Ontario
M5V 3J1

WSIB யின் இணைய தளம்: www.wsib.on.ca

WSIB, பல மொழிகளிலும் மொழிபெயர்ப்பு, மேல்விளக்கம் அத்துடன் பொதுவான தகவல்களையும் அளிக்கும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். உங்களுடைய மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் 1-800-465-5606 என்ற பன்மொழி எண்ணை அல்லது 416 344-2000 என்ற எண்ணை அழைக்கவும்.

இந்தப் பத்திரத்தை திருத்தி அமைக்கும் உரிமை WSIB க்கு உள்ளது.